# தமிழ்ச் சிட்டு

சிறுவர் கலை இதழ்.
குரல்: 9; இசை: 11.
விலை: 35 காசு.



## பந்தாடு!

பச்சைக் கிளியே!
பாடுங் குயிலே!
பந்தை எடுத்தாடு!—என்
அச்சுப் படிவே!
அசையும் விளக்கே!
அடித்துப் பிடித்தாடு!

செவந்திப் பூவே!
செந்தா மரையே!
செவ்வடி சிவப்பேற—என்
குவளை விழியே!
கோவைப் பழமே!
குதித்துக் குதித்தாடு!

மல்லிகை மொக்கே!
மடமான் கன்றே!
மணிக்கை அடித்தாடு!—என்
முல்லைச் சரமே!
முத்துச் சிரிப்பே!
முன்பின் வளைந்தாடு!

பாலொளி நிலவே!
பன்னிற மயிலே!
பந்துடன் நீயாடு!—என்
வாலைத் திருவே!
வாடா மலரே!
வானில் எறிந்தாடு.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

# முத்துமொழிகள்

o தூய்மையான நோக்கமும், தெளிவான அறிவும், கொள்கை வெல்லும் என்ற நம்பிக்கையும் இருக்குமானால், தட்டுத்தடுமாறிப் பேசும் பேச்சும் நாளடைவில் முழக்கமாகியே தீரும்
—அறிஞர் அண்ணா.

o அறிவை ஆக்க வழியில் செலுத்துகிறவன் நல்ல முடிவை அறிய நாளாகும். அறிவை அழிவு வழியில் செலுத்துகிறவன் கெட்ட முடிவை அறிய நாளாகாது.
—பர். சான்சன்.

o மாந்தன் தன்னுடைய உடைமைகள் எல்லாவற்றையும் இழந்து விட்டுத்தான் உயிரை விடவேண்டும். தன் உடலைக் கூட இம் மண்ணிடம் ஒப்படைத்து விடவேண்டும்.
—அறிஞர் யங்.

o இருளும் ஒளியும் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பதைப் போல, தேவையும் கண்டுபிடிப்பும் ஒன்று பிணைந்துள்ளன.
—யாரோ.

o உண்மைக்காக எதையும் துற; ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே! —விவேகானந்தர்.

o சிலநேரங்களில் நமக்குப் பகரமாக நம் உணர்ச்சிகளே பேசுகின்றன; நம் உணர்ச்சிகளே முடிவு கொள்கின்றன; நம் உணர்ச்சிகளே செய்கின்றன. —எலியட்.

o திறமையும், தேவையும், இன்றியமையாமையும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் வாழ்கின்றன. —பிதாகோரசு.

o அச்சம் தீயது; தகாதது; எதற்கும் அஞ்சாதே; மற்றவையெல்லாம் தாமே வந்து சேரும்.
—நேரு.

o தன் ஒழுக்கத்திற்குப் பொருந்தாததில் தன் விருப்பத்தைச் செலுத்துதலைக் காட்டிலும் மேலான பேதைமை வேறொன்றில்லை.
—திருவள்ளுவர்.

o மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துகளை மாற்றுவது, பண்பு தருவது, செயல் புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கின்றோம். —அறிஞர் அண்ணா.

o ஆய்ந்தறிதல் வேண்டும்; அதற்கேற்ற அஞ்சாமை. வேண்டும். இல்லையேல் எண்ணத்தைச் சிறையிலிட்டுக் கொடுமையைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையானோர் ஆகிவிடுவோம்.
—பெர்த்திரண்டுரசல்

(தொகுப்பு; ப. ஆறுமுகம், வத்தகவுண்டன்வலசு)

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல் 9] தி. பி. 2008. துலை (நவம்பர்-1977) [இசை-11


## வாழ்வியல் முப்பது!

புகழ்ச்சியின் மயக்கறு!
புன்மையை உதறு!
இகழ்ச்சியைத் தாங்கு;
எள்ளலை எடுத்தெறி.
நிகழ்ச்சியை வரிசைசெய்;
நினைவை உறுதிசெய்!
மகிழ்ச்சியும் துயரமும்
மனத்தின் செயல்களே! 1

ஊக்கமும் முயற்சியும்
உண்மையும் நேர்மையும்
ஆக்க வினைகளும்
அடிப்படைக் கொள்கைகள்!
ஏக்கம் அகற்று!
ஏறுபோல் வினைசெய்!
தாக்கும் இழிவுகள்
தாமே விலகிடும்! 2


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்,
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005, தமிழகம்.

இன்றைய நாள்நினை;
இனிவரும் நாள்நினை;
என்றும் புதியன்,நீ!
யாவும் புதியன!
அன்றன்றும் புதுநாள்!
அனைத்தும் இனியன!
ஒன்று,கை போகின்
ஒன்றுன் கைவரும்! 3

உள்ளம் விழைவதை
அறிவினல் ஓர்ந்துபார்!
தள்ளத் தகுவன
உடனே தள்ளுவாய்!
தள்ளத் தகாதென்
றறிவு தேர்வதைக்
கொள்ள முயற்சிசெய்!
கொடுநினை வகற்று! 4

உயர்வாய் நினைப்பன
உன்னை உயர்த்தும்!
மயர்வாம் நினைவுகள்
அறிவையும் மயக்கும்!
துயர்வுறும் வினைக்குத்
துணிவுகொள் ளாதே!
அயர்வின்றி இயங்கு!
ஆக்கம் துணைவரும்! 5

ஒழுக்கமே உன்றனை
உயர்த்திடும் படிநிலை
இழுக்கம் இழுக்கு!
இழிவுறும் அதனல்!
பழக்கம் கொடியது!
பண்புபொன் மகுடம்!
இழக்கும் பொழுதுகட்(கு)
ஈட்டம் நினைந்துபார்! 6

ஒவ்வொரு நொடியும்
உனக்கென வாய்த்தது!
எவ்வொரு நொடியும்
இழத்தல்செய் யாதே!
இவ்வொரு நொடிக்கே
ஏங்கி யிருந்ததாய்
அவ்வொரு நொடியும்
அளாவிப் பயன்பெறு! 7

நேற்றெனல் வேறு!
இன்றெனல் வேறு!
நேற்றிருந் ததுபோல்
இன்றிருந் திடாதே!
நேற்றினும் இன்றுநீ
நெடிது வளர்ந்துளாய்!
நேற்றைய வளர்ச்சியுள்
நினைவொடுக் காதே! 8

நேற்றைய நினைவுகள்
இன்றைய செயல்கள்!
நேற்றைய அறிவோ!
இன்றறி யாமை!
நேற்றைய அடிக்குமேல்
நெட்டடி இன்றுவை!
நேற்றுநீ காற்றெனில்
நீள்விசும் பின்றுநீ! 9

உன்றன் விழிகளை
உயர்த்துக வானில்!
உன்றன் செவிகளை
உலகெலாம் பரப்புக!
குன்றுபார்! கதிர்பார்!
கோடிவிண் மீன்பார்!
நின்றுபார்! நடந்துபார்!
நீ,சிறு உலகம்! 10

சிற்றுயிர் எறும்பும்
சுற்றுதல் காண்,நீ!
மற்றுயிர் எல்லாம்
இயங்குதல் மதித்துணர்!
அற்றெனில் நீ,ஏன்
அமர்ந்திங் கிருப்பது?
கற்றுவா; எண்ணிவா;
காற்றில் நனைந்துவா! 11

மலைமுக டேறு!
மடுவினில் இறங்கு!
கலைகுவி சோலையுள்
காற்றாய் நுழைந்துபோ!
அலைவிட் டுள்புகு!
ஆற்றினில் நீந்து!
புலைநினை வழிந்திட
இயற்கையுள் புதை,நீ! 12

உயிரை மலர்த்து;
உணர்வை அகல்செய்!
பயிர்,நீ! கதிர்,நீ!
பழம்பெரு வான்,நீ!
துயர்கொளும் சிறிய
துகளிலை; நீ,ஓர்
உயிரொளிப் பிழம்பு;
உலக உடம்பு! 13

சிற்றிறை வன்,நீ!
சிந்தனை வெள்ளம்!
அற்றிடாப் பிறவி;
அறிவுக் கொழுந்து!
வற்றிடா ஊற்று;
வளர்பெரும் புடவி!
குற்றிடா நெற்று;
கோடிக் குமுகம்! 14

சிறுமையை எண்ணிச்
சிறுத்துப்போ காதே!
வெறுமையை நினைந்து
வெயர்த்தழி யாதே!
குறுமை நினைவுகள்
குறுமையாம் வாழ்க்கை!
நறுமை நினைவுகள்
நல்லொளிப் பிறவி! 15

உண்மை வலியது!
உள்ளமும் வலியது!
திண்மை தருவதும்
தேர்வதும் அதுதான்!
மண்மேல் அனைத்தும்
மடிந்துமட் குவன!
எண்மேல் எண்ணிய
ஒருவனாய் இரு,நீ! 16

புன்மை சிறியது;
பொய்மையும் சிறியது!
புன்மேல் பனித்துளி
போலும் உடம்பதன்
மின்போல் வாழ்க்கையில்
மீந்துவ துயர்வே!
புன்மையும் புரையும்
பொக்கன; புதைவன! 17

தருக்குகொள் ளாதே!
தன்முனைப் பகற்று!
செருக்குச் சேற்றினில்
சிதைந்தவர் பலபேர்!
உருக்குலைத் திடும்,அது;
உன்னையும் உம்மையும்!
திருக்குலைத் திடும்,அது;
தீமையும் விளைக்கும்! 18

உலகுக் குரியனாய்
உன்னை உயர்த்திடு!
உலகுக் குரியராய்
உயர்த்து மாந்தரை!
கலகக் கொள்கையில்
கால்கோ ளாதே!
விலகப் பயில்,நீ;
வீணுரை வீணரை! 19

மாந்த ஒளி,நீ!
மந்த விலங்கிலை!
ஏந்தல் எனநட!
இளைத்தும் தலைநிமிர்!
காந்தப் பார்வையால்
மக்களைக் கவர்ந்திடு!
சேந்து,அவர் நினைவை!
செம்மை நினைவுவார்! 20

அறிவொளி விளக்கால்
அவர்விளக் கேற்று!
செறிவுரை பகர்ந்திடு!
செழிக்க அன்புசெய்;
முறிவுரை பகரேல்!
முகவுரை கீழ்மை!
வெறியுணர் வடக்கு!
வீம்பறி யாமை! 2

உரையால் உரைபெறு!
உவகையால் ஒளிசேர்!
புரைசொல் இழுக்கு!
போலிமை வினைதவிர்!
திரையிட் டிராதே!
தீமையைத் துணிந்துகொல்!
வரையறு போக்கை;
வாழ்வைக் காதல்செய்! 22

கலைபயில்; எண்பயில்;
கவினிலக் கியம்பயில்!
சிலைபயில்; வண்ணச்
சித்திரம் எழுது!
அலைபயில் கலம்பயில்!
அளாவும் விண்பயில்!
உலைபயில்; உடல்பயில்;
உன்னை நீ பயில்! 23

விளங்கிய செல்வம்
விளைபடு கருவி!
வளங்களைப் பகிர்ந்துகொள்!
வயல்விளை வறிவு!
உளங்கொள ஈத்துண்!
உவகையே ஈகை!
களங் கல் விக்கமை!
கனவிலுங் கேள்விகொள்! 24

சிறக்கச் செய்திடு;
சிறப்பூண் சிறிதுண்!
உறக்கம் மிகுதவிர்!
ஓய்வுளக் கிளர்ச்சி!
மறக்க மறப்பன!
மதிப்பன மதி;மகிழ்!
துறக்க, துறப்பன!
துய்ப்புயிர் வாழ்க்கை! 25

ஓம்புக நல்லுடல்;
உயிர்க்கது ஊர்தி!
சோம்பல் இறப்பு!
சுறுசுறுப் பியக்கம்!
தீம்பர் இணைதவிர்!
தேனினும் அளவுகொள்;
தேம்பல் கோழைமை;
திறலொடு துணிந்திரு! 26

நகைநட் பன்று;
நன்னட் பறிந்துதேர்!
பகைமுன் விலகு!
பார்வையிற் கூர்மைகொள்!
மிகைதவிர் எதிலும்!
மெப்புரை தப்பு!
புகைநெருப் பாகும்!
பொய்வளை விழையேல்! 27

பொழுதெழு முன்னெழு!
பொழுதொடு துயில்சேர்;
பழுதுறங் கின்மை!
பனிநீர் நிதங்குளி!
தொழுது பெருதே!
தூய்மை உடையணி!
விழுதெனத் துணையிரு!
வீறுவிந் தடக்கம்! 28

பொருந்துணு விருந்து;
புறவுரை முதுபிணி!
அருந்தலும் அளவுசெய்!
ஆசை அடக்கியாள்!
திருந்துதல் வாழ்க்கை!
தெறுநோய் முன்தவிர்!
மருந்துணல் தீது!
மணிநீர் மருந்து! 29

பொதுமை உலகிது;
பொதுமை வாழ்விது;
பொதுமை உயிர்நலம்!
பொதுமையே இயக்கம்!
பொதுமைஉன் எண்ணம்;
பொதுமைஉன் வினைகள்!
பொதுமையாய் ஆக்கு,உணை!
புதுநலங் காண்பாய். 30

# தேனீயின் நஞ்சு ஓர் அரிய மருந்துப் பொருள்.

ஆயிரக்கணக்கான நோய்களுக்குத் தேன் ஓர் ஆற்றல் மிக்க மருந்தென நீண்ட காலமாகவே நாம் அறிவோம். ஆனால் அண்மை மருத்துவத் துறை, இந்தத் தேனீக்களின் மற்றோர் அரிய விளை பொருளான நஞ்சையும் இப்போது பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. பல மருந்துப் பொருள்களுடன், தேனீயின் நஞ்சு சேர்த்துப் பயன் படுத்தப்பெறுகிறது. வாத நோய், 'நியூரைட்டீசு' என்ற நரம்பு அழற்சி போன்ற நோய்களுக்கு இது மருந்தாகப் பயன் படுவதுடன், பாம்பு நஞ்சிற்கு மாற்றாகவும் மருத்துவத் துறையில் பயன்படுத்தப் பெறுகிறது.

தேனீக்கள், தேனைத் திரட்டச் செய்வதுடன், அவற்றின் கூடு களிலேயே நஞ்சையும் உருவாக்குமாறு எவ்வாறு, அவற்றிற்குக் கற்றுக் கொடுப்பது? எசுதோனிய வேளாண் பேரவையைச் சேர்ந்த பேராசிரியர் பால் அலெசு என்பார், தேனீக்கள் துறையறிஞர். இவர் உதவியுடன் இப்போது அறிவியலர்கள் இச்சிக்கலைத் தீர்த் துள்ளனர். 10 அல்லது 15 தேனீக்கள் கூட்டத்திலிருந்து, அரை மணி நேரத்தில் சிறிதளவு நஞ்சைத் திரட்டும் சிறிய கருவியொன்றை இவ்வறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

பல ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட தேனீக் குடும்பத்திற்கு ஏதம் (ஆபத்து) நேரிடும் வாய்ப்பு இருந்தால்தான், தேனீக்கள் நஞ்சைச் சுரக்கின்றன. அல்லது அவற்றிற்குத் தொந்தரவு தரும் சில கூறுகளும் அவை நஞ்சைச் சுரக்குமாறு செய்கின்றன. அப்படி யானால் கூட்டிலுள்ள தேனீக்களுக்குத் தொல்லை விளைவிக்காமல், அவை நஞ்சை, மட்டும் சுரக்குமாறு செய்வதெப்படி? தொடர்ச்சியான மின்னோட்டத்தின்போது, திடீரெனத் தோற்றுவிக்கப்படும் ஒரு மின் அதிர்ச்சி, தேனீக்களை நஞ்சு சுரக்குமாறு செய்கிறது என ஆய் வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதனைப் பெறுவதற்காக, தேன் கூட்டில், ஒரு கண்ணாடித் தகடு நஞ்சு திரட்டுவதற்காக வைக்கப் படுகிறது. அதன் மின் வாய்கள் மின் உணர்வைத் தூண்டும் கருவி களுடன் இணைக்கப் படுகின்றன. சிறிது நேரம் கழித்து, படிகத் தன்மையிலுள்ள நச்சுத்துகள்கள், அந்தக்கண்ணாடித் தகட்டிலிருந்து திரட்டப் படுகிறது. மருந்துத் தொழிலுக்குத் தேவையான அரிய மூலப் பொருள் இது.

தேனீயின் நஞ்சு அதிக விலை மதிப்புடையதாகும். 1 அயிர சீரெடை (கிலோகிராம்) தேனீ நஞ்சு. நான்கு மகிழுந்துகளின் விலைக்குச் சமம்.

உருசியாவில் எசுதோனியாவிலும், உக்ரெய்னிலும் நடத்தப்பட்ட ஆய்வுகளிலிருந்து, தொழில் நுட்பப பொறிகள் அல்லது கருவிகள் குறித்து தேனீக்கள் கவலைப் படுவதில்லை என்பதும், அவை தொடர்ந்து தேன் திரட்டுவதில் ஈடுபடுகின்றன என்பதும் புலனாயிற்று.

# நெறி முறையை மீறியவர் யார்?

போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் அந்த அதிகாரி, ஒரு பெண் ஓட்டி வந்த மகிழுந்து வண்டியை நிறுத்தினுர். அவளுக்கு வணக்கம் செலுத்தி விட்டு, அவளது ஓட்டுநர் உரிமத்தைக் காண்பிக்குமாறு கேட்டார்.

"ஏன்?" என்று அந்தப் பெண் வியப்புடன் வினவினுள்.

"நீங்கள் போக்குவரத்து நெறிகளில் ஒன்றை மீறினீர்கள்".

"யார் சொன்னது அப்படி?"

"நானே கண்ணுல் பார்த்தேன் – உம்! உரிமத்தை, எடுங்கள்!"

"முன்பின் தெரியாத ஒருவரிடம் நான் ஏன் என் உரிமத்தைக் கொடுக்க வேண்டும்?"

"நான் ஒரு போக்குவரத்து அதிகாரி. உங்கள் ஓட்டுநர் பதிவுத் தாள்களை ஆய்வதற்கு எனக்கு அதிகாரம் உண்டு."

"நீங்கள் ஒரு போக்குவரத்து அதிகாரி என்று எனக்கு எப்படித் தெரியும்?"

"என் சீருடையைப் பார்த்தால் தெரியவில்லை? ... ... ... !"

"ஓ:கோ! ஆடை ஏமாற்றி விடலாம். முன்னெரு தடவை, பத்து ஆண்டுகளுக்கு முன்னர், என் தோழி ஒருத்திக்கு ஏற்பட்ட பட்டறிவு எனக்கு நினைவுவருகிறது. என்ன நேர்ந்ததென்ருல்......"

"இந்தக் கதையெல்லாம் தேவையில்லை–எடுங்கள் உரிமைத்தை!"

"உடையை மட்டுமே வைத்து நான் உங்களை நம்ப அணியமாயில்லை என்றுதான் நான் சொல்ல வந்தேன்."

"அப்படியானுல், என்னுடைய அதிகாரச் சான்று அட்டையை நான் காண்பிக்க முடியும்!"

"அது சரி! எங்கே அதைப் பார்க்கலாம்.... ஓ:கோ உங்கள் பெயர் நாடிராம்;. அப்படித்தானே!"

"ஆமாம்! நாதிராம்."

"அப்படியானுல் 'டி' போட்டிருக்கக் கூடாது. 'தி' போட்டிருக்க வேண்டும். தாழ்வில்லை. இந்தப் புகைப்படம் உங்களைப் போல இல்லையே!"

"ஒரு வேளை அதில் நான் தலைக்கவிப்பு அணியாதிருப்பதனுல் இருக்கலாம்."

"ஆமாம்! ஆமாம்! எங்கே, தலைக்கவிப்பைக் கழற்றி விட்டு நில்லுங்கள் பார்க்கலாம். எங்கே வலப்புறமாகக் கொஞ்சம் தலையைத் திருப்புங்கள்! உம்! உங்கள் தோற்றம் இருக்கத்தான் செய்கிறது! ஆனுலும் படத்தில் நீங்கள் மிகவும் இளைஞராக இருக்கிறீர்களே!"

'ஆமாம்! அது 7 ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம்.'

"அது எனக்கும் தெரிகிறது. சிறு அகவையில் நீங்கள் சற்று அழகாகத்தான் இருந்திருக்கிறீர்கள்."

"போதும், போதும்;-என்னுடைய அதிகாரச்சான்று அட்டையை என்னிடம் கொடுங்கள்."

"ஏன் இவ்வளவு விரைவுப் படுகிறீர்கள்? அது போலிகைச் சான்ருக இல்லாதவரை, உங்களுக்கு ஒன்றும் தொந்தரவு இல்லேயே!"

"சரி சரி, நீங்கள் என் நேரத்தை வீணுக்கிக் கொண்டிருக் கிறீர்கள். நான் பணியில் இருக்கிறேன்"

"அடே, நான் மட்டும் என்ன? எனக்கும் எத்தனையோ வேலை இருக்கிறது. இப்பொழுது நான் கடைக்குப் போகிறேன். பின்னர் தையற்காரனிடம் போக வேண்டும். அதற்கப்புறம் நோய் வாய்ப் பட்டுள்ள என் அத்தையைப் பார்த்துவிட்டு, என் கணவருக்குத் தொலேபேசி செய்து .. ."

"அம்மா! வீணுகப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். என் சான்றட்டையைக் கொடுங்கள்; உங்கள் பின்ஞல் எத்தனை இயங்கிகள் நின்று கொண்டு உள்ளன பாருங்கள்!"

"என்னுலா! அட இழவே! நாஞ நிறுத்தினேன்? நீங்கள் தானே நிறுத்தினீர்கள்!"

'சரிதான்! சரிதான்! என் சான்று அட்டையை கொடுங்கள்! இனியும் நான் உங்களே நிறுத்தி வைக்க விரும்பவில்லே."

"அதுதான் நல்லது! இதோ, உங்கள் சான்று அட்டையை வாங்கிக் கொள்ளுங்கள்! இனி மேலும் இது போன்ற போக்கு வரத்துக்கு இடைஞ்சல் செய்து நெறிமுறைகளே மீருதீர்கள், தெரி கிறதா?" என்று கூறி அந்தப் பெண் வண்டியை ஓட்டிஞள்.

—இவான் மார்டினேவ்

---

# மதம்

கி.பி. இரண்டாம் நூற்ருண்டுக்குப் பிற்பட்ட நூல்களில் மட்டுமே 'மதம்' என்னுஞ்சொல், கடவுளேப் பற்றியாதல், உயிரைப் பற்றியாதல், உலகத்தைப் பற்றியாதல், ஒழுக்கத்தைப் பற்றியாதல், மக்கட் குழுவினர் கொண்ட கொள்கைக்குப் பெயராய்த் தமிழ் நூல் களில் வழங்கப் பெற்று வருகிறது. கி.பி. மூன்ரும் நூற்ருண்டுக்கு, அஃதாவது இற்றைக்கு ஆயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட நூல்களில் 'மதம்' என்னுஞ்சொல், கொள்கை என்னும் பொருளில் வருதலேக் காண்கிலேம். புறநானூறு, பரிபாடல், பத்துப் பாட்டு முதலான பழைய இலக்கியங்களில் மதம் என்னுஞ்சொல் வலிமை, செருக்கு, அறியாமை, அழகு முதலான பொருள்களில் வருகிறதே யன்றிக் கொள்கையென்னும் பொருளில் வரவில்லே. கி.பி. இரண்டாம் நூற்ருண்டில் இயற்றப் பெற்றதான மணிமேகலேயிலும் கூடச் சமயம் என்னுஞ்சொல் வந்திருக்கின்றதே யன்றி, அதற்கு ஈடான 'மதம்' என்னுஞ்சொல் வரவில்லே. கி.பி. மூன்ரும் நூற்ருண்டின் முற்பாதியில் தோன்றிய மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசக காலத்திலிருந்துதான் மதம் என்னுஞ் சொல், கொள்கை என்னும் பொருளில் இன்றுகாறும் வழங்கி வருகின்றது.

—மறைமலேயடிகள். 'தமிழர் மதம்'

# கணக்குப் புதிர்.

க. மலர்-அமிழ்தன்
வேப்பங்குறிச்சி.

என் வீட்டில் வெற்றிலைக் கொடிக்கால் ஒன்று இருந்தது. நான் என் வீட்டில் வேலைசெய்யும் இளவழகன், செந்தில், மலர்மாறன் ஆகிய மூவரையும் அழைத்துச் சென்று,

இளவழகனிடம்-50 வெற்றிலையையும்,

செந்திலிடம்–30 வெற்றிலையையும்,

மலர்மாறனிடம்-10 வெற்றிலையையும்,

கொடுத்துவிட்டு, அவர்களை நோக்கி ஒருவன் விற்கும் விலைக்கே மற்றவன் விற்க வேண்டும் என்றும், விற்பனைத் தொகையும் ஒரே அளவினதாய் இருக்க வேண்டுமென்றும் கூறி, விற்றுவரச் சொன்னேன். அப்படியானால் ஒவ்வொரு வெற்றிலையையும் என்ன விலைக்கு விற்றிருப்பார்கள் என்பதையும், ஒவ்வொருவரும் என்னிடம் எவ்வளவு தொகை கொடுத்திருப்பார்கள் என்பதையும் கண்டு பிடியுங்கள்.

(விடை 16-ஆம் பக்கம் பார்க்க)

# உங்களுக்குத் தெரியுமா?

நா. எழில்-மகிழ்நன்.

1) தூய வயிரத்தின் வண்ணமென்ன?
2) நீலப் பொத்தகங்கள் (Blue Books) என்றால் என்ன?
3) உலகத்தில் குளம்பி எங்கே அதிகமாகப் பயிராகிறது?
4) இந்தியாவில் காடுகள் மிகுதியாக உள்ள மாநிலம் எது?
5) இந்தியாவில் 'மைதிலி' என்ற மொழி எம் மாநிலத்தில் பேசப் படுகிறது?
6) நம் உடலில் அரத்தம் பாயாத இடங்கள் யாவை?
7) இந்தியாவில் கரும்பு அதிகமாக விளையும் மாநிலம் எது?
8) நம் உடலில் மிகச்சிறிய எலும்புகள் எங்குள்ளன?
9) மாநில ஆளுநர் ஆவதற்கு ஏதேனும் அகவை வரம்புண்டா?

(விடைகள் அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

# ஏது அதிகத் தொலைவு செல்லும்?

முன்னொரு காலத்தில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் மனைவி இறந்துவிட்டாள். அவனுக்கு மூன்று மகன்கள் இருந்தனர். மகன்கள் மூவருக்கும் திருமணமாகி விட்டது. அந்தக் குடும்பத்தின் வாழ்க்கை நல்ல முறையில் சென்று கொண்டிருந்த போதிலும் அங்கு ஒரு குறை இருந்தது. அந்தக் குடியானவனின் மருமகள்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி இருந்தார்கள். அவர்கள் மூவரும் வீட்டின் தலைவிகளாக இருக்க விரும்பினார்கள். எனவே, ஓயாமல் சண்டையிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

மருமகள்கள் போடும் சண்டையைப் பார்த்துக் கிழவனுக்கு மிகவும் வெறுப்பு ஏற்பட்டது. ஒருநாள் அவன் தனனுடைய பையன்களை அழைத்து இவ்வாறு சொன்னான்: "ஒவ்வொரு நாளும் உங்கள் மனைவிமார்கள் சண்டை போடுகிறார்கள். ஒவ்வொரு நாளும் வீடு அமளி துமளிப்படுகிறது. இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். எனவே, அவர்களுக்கு ஒரு விடுகதை போடப் போகிறேன். அந்த விடுகதைக்கு எவள் சரியான விடை கூறுகிறாளோ, அவள்தான் வீட்டின் தலைவியாக இருக்க முடியும். அதற்குப் பிறகு சண்டை சச்சரவு என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. இதற்கு அவர்கள் ஒப்புக் கொண்டால், தொல்லை தீர்ந்தது" என்று கிழவன் கூறினான்.

இந்தக் கட்டுப்பாட்டுக்கு மருமகள்கள் மூவரும் ஒப்புக் கொண்டனர்.

மாலையில் மருமகள்களிடம் கிழவன் கூறினான்: "என் விடுகதைக்கு விடையைக் கண்டுபிடிக்க நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள். விடையை இன்று இரவு முழுவதும் நீங்கள் எண்ணிப் பார்க்கலாம். நாளை விடியற் காலையில் நான் விடையைக் கேட்பேன். யார் சரியான விடையைக் கூறுகிறாளோ, அவளே இந்த வீட்டின் தலைவி. இதுதான் விடுகதை: "எது அதிகத் தொலைவு செல்லும்?"–இதற்கு நாளை விடியலில் விடை சொல்லுங்கள்."

மறுநாள் காலையில் கிழவன் தன் மகன்களையும், மருமகள்களையும் அழைத்தான். மூத்த மருமகளைப் பார்த்து, " விடை என்ன?" என்று கேட்டான். "இளவேனிற் காலத்தில் அதிகாலையில் சேவல் கூவும் போது, அதன் குரல்தான் எல்லாவற்றைக் காட்டிலும் அதிகத் தொலைவு செல்லும்" என்று மூத்த மருமகள் கூறினாள்.

"ஆமாம். சேவலின் குரல் நெடுந்தொலைவு கேட்கும்." என்று கூறிய கிழவன், இரண்டாவது மருமகளைப் பார்த்து, "உன் விடை என்ன ?" என்று கேட்டான்.

இளவேனிற் காலத்தில் அதிகாலையில் நாய் குரைத்தால், அது சேவலின் குரலைவிட அதிகத் தொலைவு கேட்கும்" என்றாள் இரண்டாவது மருமகள்.

# செவ்வாய்

இது சூரியனுக்கு 14,10,00,000 கற்கள் தொலைவில் உள்ளது. இதன் குறுக்களவு 4,200 கற்கள். இதன் எடை நம் உலகத்தின் எடையில் ஒன்பதில் ஒரு பங்கு. இதிலிருந்து பார்ப்போர்க்குக் கதிரவன் நமக்குத் தெரிவதைவிட அரைப் பங்குக்கும் குறைந்தே (45%) காணப்படுவான். சூரிய வெப்பமும் குறைவு. இது சிவப்பு நிறமாய் ஒளிவிடும். இக்கோள் சூரியனைச் சுற்றிவர 687 நாட்கள் (இரண்டு ஆண்டுகள்)பிடிக்கின்றன. நம் உலகின் இழுப்புத்திறனில் மூன்றில் ஒரு பங்கு இழுப்புத்திறனே இதில் உள்ளது. அது தன்னைத்தான் சுற்றிக்கொள்ள 24 மணி 37 நிமையம் 23 நொடிகள் ஆகின்றன. இதில் சில பகுதிகளில் செந்நிறமாகவும் சில பகுதி ளில் நீலப்பச்சை நிறமாகவும் உள்ளன. இதற்கு இரண்டு துணைக் கோள்கள் உள்ளன. இவை இரவிலும் பகலிலும் தோன்றி ஒளிரும். ஒரு துணைக்கோள் போபாசு (Phobos) என்பது. இது செவ்வாய்க்கு 3700 கல் தொலைவிலிருந்து செவ்வாயை இரண்டு நாளில் 7 முறை வலம் வருகிறது. ஒரு முறை சுற்றிவர ஏறத்தாழ $7\frac{1}{2}$ மணி நேரமா கின்றது. இது மேற்கே தோன்றிக் கிழக்கே மறையும். மறைந்து 4-மணி நேரத்திற்குள் மீண்டும் மேற்கே தோன்றும். இதன் ஒளி நம் நிலவின் ஒளியில் ஆறில் ஒருபங்கே!

இதன் இரண்டாவது துணைக்கோள் டீமாசு (Deimos) என்பது. இது செவ்வாய்க்கு 74600 கல் தொலைவில் உள்ளது. 30 மணிக்கு ஒரு முறை செவ்வாயைச் சுற்றி வருகின்றது. இது கிழக்கில் தோன்றி மேற்கே மறைகிறது. நம் நிலவின் ஒளியில் 1260-இல் ஒரு பங்கே இக்கோள் ஒளிரும். இரண்டு கோள்களும் செவ்வாய்க்கு ஒளி தருவ தில்லை. ○

---

(முன் பக்கத்தொடர்ச்சி)

"ஆமாம். சேவலின் குரலைவிட நாயின் குரைப்பு அதிகத் தொலைவுதான் கேட்கும்!" என்றான் கிழவன். கடைசி மருமகளைப் பார்த்து, "உன் விடை என்ன?" என்றான்.

'வாருங்கள். உணவு அருந்துங்கள்! என்ற வரவேற்புச் சொற் களே நெடுந்தொலைவு செல்லும்" என்றாள், மூன்றாவது மருமகள்.

"நீ சொல்லுவதுதான் மிகவும் சரி, "வாருங்கள்! உணவு அருந் துங்கள்" என்னும் அன்பான சொற்களே பல்லாயிரக்கணக்கான கற்களுக்கு அப்பாலும் பரவும். நீதான் இந்த வீட்டின் தலைவியாக இருக்கத் தகுதியானவள்" என்று கிழவன் மகிழ்வுடன் கூறினான். ○

சிறுகதை

# மகிழ்ச்சியான ஒருவன்...!

இலியோ டால்ஸ்டாய்.

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்குத் திடீரென ஒருவகை நோய் பற்றிக் கொண்டது. உடனே, அரசவையிலிருந்த மந்திரகாரர்கள் அனைவரும் அரசனுக்குப் பண்டுவஞ் செய்வது பற்றிக் கூடிக்கலந்து ஆராய்ந்தனர். மிகவும் அறிவாளியான ஒருவன், "இந்தப்பெரிய நாட்டில் மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவனின் சட்டையைப் போட்டுக் கொண்டு அரசர் ஒரு நாளிரவாகிலும் தூங்கினால், அவரது நோய் தீர்ந்து விடும்." என்று கூறினான்.

உடனே அரசனது ஆட்கள் நாலா பக்கமும் மகிழ்ச்சியாக வாழும் மாந்தனைத்தேடி ஓடினர். எங்குத்தேடியும், அவர்களுக்கு, கவலையில்லாத, மகிழ்ச்சியான ஒருவனையாகிலும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருவன் மிகவும் பணக்காரனாக இருப்பான்; ஆனால் அவனது உடல் நலம் குன்றியிருக்கும்; மற்றொருவன் நலமுள்ளவனாக இருந்தான்; ஆனால் மிகவும் ஏழையாக இருந்தான். மற்றொருவன் பணக்காரனாகவும், உடல் நலமுள்ளவனாகவும் இருந்தபோதும், ஓர் அரக்கியை மனைவியாகப் பெற்றிருந்தான்; இன்னொருவனுக்குக் குழந்தைகளைப் பற்றிய கவலை இருந்தது. சுருங்கக் கூறின், ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒரு கவலை இருந்ததால், யாருமே மகிழ்ச்சியுடனில்லை.

ஒருநாள், அந்த அரசனின் மகன், ஒரு சிறிய கீற்றுக் கொட்டகையைக் கடந்து செல்லும்போது, அதனுள்ளிருந்து ஒருவன் பேசும் குரலைக் கேட்டான்: "அப்பாடா, நான் நன்றாக உழைத்தேன்; சாப்பிட்டேன்; நல்ல தூக்கம்தான் எனக்குத் தேவை; எனக்கு வேறு என்ன கவலை?" என்று மனநிறைவுடன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டதைக் கேள்விப்பட்டவுடன், இளவரசன், தன் காவலர்களிடம், கொட்டகையில் படுத்திருக்கும் அந்தக் கவலையில்லாத மாந்தனின் சட்டையைக் கொண்டு வரும்படியும், அவனுக்கு அதற்கு மாற்றாக நிறைய பொற்காசுகளைத் தரும்படியும் உத்தரவிட்டான்.

காவலர்கள் அந்தக் கீற்றுக் கொட்டகையினுள் நுழைந்தனர். கவலையில்லாத, மகிழ்ச்சியான அந்த மாந்தனின் சட்டையை அவனிடமிருந்து எடுத்துவரத் துடித்தனர். ஆனால், அந்தோ! அவனை அவர்கள் நெருங்கிய போதுதான் அவனுக்குச் சட்டையே இல்லை என்பதைக் கண்டனர். ஆக, அந்த அரசாட்சியிலிருந்த மிக மகிழ்ச்சியான, ஒருவன் ஒரு சட்டை கூட வாங்க முடியாத அளவுக்கு ஏழையாக இருந்தான்.

# ஒரு பொங்கல் பரிசு!

இரண்டு வினாக்களுக்கும் சரியான விடையெழுதுங்கள்
(ச. தமிழ்வேலன் - மன்னார்குடி)

இதன் அடியில் இரு வினாக்கள் கொடுக்கப் பெற்றுள்ளன. அவற்றிற்கான சரியான விடைகளை எழுதி முதலில் விடுக்கும் மூவர்க்குத் தனித்தனியே தமிழ்ச்சிட்டிற்கான ஓராண்டுக் கையொப்பத் தொகை பரிசாகக் கட்டப் பெறும்.

இப் போட்டியில் மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். விடை எழுதியது தாம்தாம் என்பதை மெய்ப்பிக்க, தக்க தமிழாசிரியர்பால் சான்றுக் கையொப்பம் பெற்று விடுத்தல் வேண்டும். விடைகளை 10-12-77 க்கு முன்னர் ' தமிழ்ச் சிட்டு, சென்னை-5" என்ற முகவரிக்கு விடுக்க வேண்டும்.

### வினா-1.

பெரியவர்களையும், மதிப்பிற்கு உரியவர்களையும் பார்க்கச்செல்லுங் காலும், வரவேற்பளிக்குங்காலும் எலுமிச்சம் பழம் தருவது நம் நாட்டின் தொன்றுதொட்ட வழக்கமாக இருந்து வருகிறது. சுவையும் மணமும் மிகுந்த வேறு பழங்கள் இருந்தும் எலுமிச்சம் பழத்திற்கு இத்தகைய "வரவேற்புச் சிறப்பு" இருப்பது ஏன்?

### வினா-2.

தமிழ் நாட்டு மக்களாகிய நாம், பூக்களில் சிறந்தது தாமரை என்று கருதுகிறோம். "பூவுக்குத் தாமரை பொன்னுக்குச் சாம்பூநதம்" என்கிறது நீதி வெண்பா. "பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை" என்று போற்றுகிறார் அப்பர்பெருமான்.

தாமரைப் பூவினைவிட மணத்திலும் நிறத்திலும் சிறந்த பூக்கள் வேறு தமிழ் நாட்டில் இல்லையா? இருக்கின்றனவே. அவ்வாறிருக்க, தாமரையை இவ்வாறு போற்றுவதற்கும், கலைமகள் அலைமகள் போன்ற தெய்வங்கட்கு இருக்கையாக்கி மகிழ்வதற்கும் யாதோ ஒரு சிறந்த கரணியம் இருத்தல் வேண்டும். அது யாது?

## கணக்குப் புதிர் விடை

இளவழகன், 1 காசுக்கு 7 வெற்றிலை மேனி 49 உம், மீதி 1ஐ 3காசுக்கும் விற்றான். அவனிடம் உள்ள தொகை 10 காசு ஆகும்.

செந்தில், 1 காசுக்கு 7 வெற்றிலை மேனி 28 வெற்றிலையை விற்றான். மீதியுள்ள இரு வெற்றிலைகளை 3 காசுமேனி விற்றான். அவனிடம் உள்ள தொகை 10 காசு ஆகும்.

மலர்மாறன், 1 காசுக்கு 7 வெற்றிலை மேனி 7 வெற்றிலையை விற்றான். மீதி வெற்றிலையை 3 காசுமேனி விற்றான். அவனிடம் உள்ள தொகை 10 காசு ஆகும்.

# பயன் மொழிகள்.

- மக்கள் எதைச் செய்வது அரிது என்று கூறுகிறார்களோ அதைச் செய்வதில்தான் வாழ்வின் சிறந்த மகிழ்ச்சி அடங்கியுள்ளது. —வாட்டர் பேகாட்
- எல்லா மகிழ்ச்சியான இல்லங்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன; ஆனால் ஒவ்வொரு துயரமான இல்லமும் அதன தன் வழியில் வேறு வேறாகவே இருக்கிறது. —தால்சுதாய்.
- கலையிலும் இலக்கியத்திலும் தோல்வியடையும் மாந்தன் திறனாய்வாளனாகிறான். —பென்சமின் திசுரேலி
- மெய்யறிவாளன் கண்களால் காண்பனவற்றை நம்ப மாட்டான். ஏனெனில் அவன் காணாதவற்றைப் பற்றித் தொடர்ந்து எண்ணிக் கொண்டிருக்கின்றான். —பான்டனில்.
- சுறுசுறுப்பான தேனிக்கு வருத்தத்திற்கு நேரமில்லை. —வில்லியம் பிளேக்.

(தொகுப்பு: சி. நா செந்தமிழ்ச் செல்வன்)

- கண்பார்வை அற்றவன் குருடன் அல்லன்; தன் குற்றங் குறைகளைச் சரியாக உணராதவன் இருக்கின்றானே அவன் தான் சரியான குருடன். —காந்தியடிகள்.
- மாந்தனிடமும், மாந்தத்தன்மையிடமும் இரக்கம் காட்டாமல் வெறும் கல்லை வணங்குவது வெறும் நடிப்பே -விநோபா.
- உள்ளத்தில் தூய்மையும், உண்மையான நம்பிக்கையும் இருந்தால் ஆண்டவன் கூப்பிட்டபோது வருவான். —இராமகிருட்டிணர்.
- அன்பு என்பது ஈகமே! அஃது எதையும் எடுத்துக் கொள்வது இல்லை. கொடுத்துக் கொண்டேயிருப்பதுதான் அதன் இயல்பு. —விவேகானந்தர்.
- பலரைப் பற்றியும் தெரிந்துகொள்; சிலரோடு மட்டும் பழகு; இருவர், மூவரோடு மட்டும் நெருங்கிய நட்புக்கொள். —பர். மு. வரதராசனார்.
- நாளுக்கோர் அச்சத்தை வெல்லாதவன் வாழ்க்கையின் முதல் பாடத்தையே கல்லாதவன். —எமர்சன்.
- ஒருவன் புன்முறுவல் பூக்கலாம். ஆனால் அவன் தீயவனாக இருக்கலாம்! —செகப்பிரியர்.
- ஆசைகள் வளர, வளர தேவைகளும் வளர்ந்து கொண்டே போகும். —பிளேட்டோ.

(தொகுப்பு: க. பாண்டியன்)

## உங்களுக்குத் தெரியுமா?—விடைகள்.

1) நிறமற்றது.
2) அரசினர் வெளியிடும் நூல்கள்.
3) பிரேசில் நாட்டில் (4) அசாம் (5) பீகார்.
6) உகிர் (நகம்), மயிர். 7) உத்திரப் பைதிரம்.
8) செவியின் நடு அறையிலுள்ள சிற்றெலும்புகள்
9) உண்டு. 45 அகவை.

# ஆத்திசூடி.

மொழிபெயர்ப்பு: க. சின்னப்பன், தர்பன், தெ. ஆப்பிரிக்கா.

1. அறஞ்செய விரும்பு.
   Have desire to do charity.
2. ஆறுவது சினம்.
   Anger is controllable.
3. இயல்வது கரவேல்.
   Don't hide things, which you could spare.
4. ஈவது விலக்கேல்
   Don't obstruct others doing charity.
5. உடையது விளம்பேல்.
   Don't be proud of possession.
6. ஊக்கமது கைவிடேல்.
   Don't give up hope (always endeavour).
7. எண்ணெழுத் திகழேல்.
   Don't neglect numbers and letters.
8. ஏற்ப திகழ்ச்சி.
   Begging is degrading.
9. ஐய மிட்டுண்.
   Satisfy other's hunger before yours.
10. ஒப்புர வொழுகு.
    Conform to the accepted norms.
11. ஓதுவ தொழியேல்.
    Don't neglect study.
12. ஔவியம் பேசேல்.
    Don't talk jealously.
13. அஃகஞ் சுருக்கேல்.
    Don't deceive by under weighing. (grain)
14. கண்டொன்று சொல்லேல்.
    Don't speak differently from what you have seen.
15. ஙப்போல் வளை.
    As the letter ங substitutes its useless eleven relative letters-(ஙா, ஙி etc) so should you. (தொடரும்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005, (தமிழகம்)